மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் இருபது வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 231.10 இலட்சங்களுக்கான உத்தேச மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்கான நகர்மறன்ற ஒப்புதல் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் கிடைக்கப் பெற்ற பின், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக இத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு அனுப்பி வைக்கும் அரசின் ஒப்புதல் பெற்றபின், திட்ட செய லாக்கப் பணிகள் தொடங்கப்படும்.

கூட்டுக் குடிதண்ணீர் திட்டம்.

185—(*வினா எண். 994) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா !

பொன்மலை நகராட்சி, (அ) ஆலத்தூர், கோ. அபிஷேகபுரம், அரியமங்கலம் பேரூராட்சிகளின் பகுதிகளுக்கான கூட்டுக் குடி தண்ணீர் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) அதற்கான மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) திட்டச் செலவு ரூ. 421.97 இலட்சம், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 15.53 இலட்சம்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தைப் பற்றி, இது மிக விரைவாக இருக்க வேண்டும் என்ற நிலைமையில் தான் இந்தத் திட்டம் ஒவ்வொரு முறையும் ஒத்தி வைக்கப்படுவதும், பிறகு கிணறு வெட்டி அது பெயிலியர் ஆகி மறுபடியும் வெட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஜனங்கள் ஏற்கனவே பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படு வதால், மிகவும் விரைவாக அதைத் துவக்கி அமல் நடத்து வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண். மிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் நான் திருச்சிக்கு சென்ற பொழுதுகூட அங்கிருந்த குடிநீர் வடி

கால் வாரிய அதிகாரிகளை அழைத்து இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நேரிடையாகவே சொல்லி இருக்கிறேன். இது குறித்து விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக பல மாவட்டங்களில் ஏராளமான பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கோவையியிலேயும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அங்கே பல பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டம் கொண்டு வருவதாக இருக்கின்றது. மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. வறட்சிப் பகுதியாதலால், தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, அத்திக்கடவு திட்டத்தைச் செயலாக்கி, அந்தக் கோவை பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து கோவைக்கு விமானத்தில் செல்ல வேண்டும் என்று சொன்னால் கூட, குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் ஆகும் என்று கருதுகிறேன். எனவே, திருச்சி சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. அபிஷேகபுரம் பஞ்சாயத்து என்னுடைய தொகுதியில் அடங்கியிருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கோ. அபிஷேகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு இரண்டு கோடியே, 37 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் போடப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அது வந்திருக்கிறது. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் விரைவில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனி வினா எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சி கிராமத்தில் துணை மின் நிலையம் விரிவுப்படுத்துதல்

186—*வினா எண். 39—**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட **வினாக்களுக்கு** விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், காஞ்சி கிராமத்தில் **உள்ள** துணை மின் நிலையத்தை விரிவு படுத்துவதற்கான **செயற்குறிப்பு** அரசின் பரிசிலனையில்உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?